Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 கார்த்திகை (27 - 11 - 1990) செவ்வாய்க்கிழமை ஓசை 272

## மூன்று நிலையங்களில் இன்று கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கு கடனாக வழங்கியவர்களில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான மீளளிப்பு இன்று மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது. நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர்களுக்கான மீளளிப்பு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இன்றுகாலை ஒன்பது மணிக்கு நடைபெறும். உடுவில், மானிப்பாய் உதவி அரசாங்க (4ஆம் பக்கம் பார்க்க)

## இருபதடி உயரக் கம்பத்தில்

# கோட்டையில் மாவீரர் சுடர்

# நள்ளிரவில் ஒளி வெள்ளம்

(நமது நிருபர்)

மாவீரர் தின சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். கோட்டையில் இன்று அதிகாலை 12-03 மணிக்கு இருபது அடி உயரக் கம்பத்தில் மாவீரர் சுடர் யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் தளபதி பானு அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. அதே வேளை கோட்டை மதில் சுவர் மீது இரண்டாயிரத்து முந்நூற்றைம்பது சுட்டிகளில் மாவீரர் சுடருக்கு ஒளியூட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மாவீரர் தின சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். கோட்டையில் அஞ்சலி நிகழ்ச்சியும், மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சியும், இடம் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில், விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி, புலிகளின் மூத்த உறுப்பினர் பொட்டு, கலை கலாசாரப் பிரிவு பொறுப்பாளர் புதுவைஇரத்தினதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் இறுதியாக விடுதலைப் புலிகள் பாண்ட் வாத்தியக் குழுவினர் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி இசை வழங்கினர். ... சாலைகளிலும் பாரிய மணி ஓசை முழக்கத்துடன் மாவீரர் இரண்டாம் ஆண்டு இறுதி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

இதனைத்தொடர்ந்து மாவீரர்களுக்கு வீடுகளிலும், ஆலயங்களிலும் இரண்டு நிமிட அஞ்சலிகள் செலுத்தப்பட்டது தூக்கத்தில் இருந்த சிறுவர் தொடக்கம் முதியவர்கள் வரை இந்த அஞ்சலியை மேற்கொண்டார்கள்.

இதைத்தொடர்ந்து யாழ். கோட்டை உட்பட சகல இடங்களிலும் 'மாவீரர்சுடர்' ஏற்றப்பட்டது. இந்த 'மாவீரர் சுடர்' அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள், காரியாலயங்கள், வீடுகள் யா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காட்சி 10 நாட்கள் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் மறுமலர்ச்சிக் கழகத்தினால்

## மழைத்தூறல்களின் மத்தியிலும் மாவீரர் சுடர்

(யாழ்ப்பாணம்)

கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாமல் வீதிகளின் இருமருங்கிலும் நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் மாவீரர் சுடரொளியை பொதுமக்கள் ஏற்றியிருந்தனர். சிந்துகின்ற மழைத்துளிகளில் இருந்து சுடர்களைக் காக்க ஆங்காங்கே குடைகளைத் தாங்கிய வண்ணம் மக்கள் ஆர்வத்துடன் நின்றிருந்தனர். சிறுவர்கள், முதியவர்கள், பெண்கள் உட்பட பலரும் வீதிகளில் குவிந்து உற்சாகம் மேலிட மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில் பங்கேற்றமையினை அவதானிக்க முடிந்தது.

## மாங்குள இராணுவ முகாமில் இருந்து தப்பி

# வவுனியா வருவோரைப் பொறுத்தே இறந்தோர் தொகை தெரியுமாம்

ணணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி, புலிகளின் மூத்த உறுப்பினர் பொட்டு, கலை கலாசாரப் பிரிவு பொறுப்பாளர் புதுவைஇரத்தினதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் இறுதியாக விடுதலைப் புலிகள் பாண்ட் வாத்தியக் குழுவினர் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி இசை வழங்கினர்.

அதேவேளை இன்று அதிகாலை 12-01மணிக்கு கோவில்களிலும், ஆலயங்களிலும், பாட

வர் தொடக்கம் முதியவர்கள்

## கண்காட்சி 10 நாட்கள் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் மறுமலர்ச்சிக் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் "தமிழீழ விடுதலைப் போராட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாங்குள இராணுவ முகாமில் இருந்து தப்பி

# வவுனியா வருவோரைப் பொறுத்தே இறந்தோர் தொகை தெரியுமாம்

(கொழும்பு)

மாங்குள இராணுவ முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்

### சிறிலங்காபாதுகாப்பு அதிகாரி தகவல்

டதை சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா ஒத்துக் கொண்டதாக பி.பி.ஸி. நேற்றிரவு செய்தி வெளியிட்டது. மேலும் அச்செய்தியில், புலிகளின் தாக்குதலால் முகாமை விட்டு ஓடிய இராணுவத்தினர் மாங்குளம் முகாமைச் சுற்றியுள்ள காடுகளுக்குள் ஓடியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில், மாங்குளம் இராணுவ முகாம் மோதலில் இறந்த சிறிலங்கா இராணுவத்தினர் எண்ணிக்கை திட்டவட்டமாக இன்னும் தெரியவில்லை எனவும், காட்டுக்குள் ஓடிய இராணுவத்தி

(4 ஆம் பக்கப் பார்க்க)

சின்ன மதவாச்சிக்கும், கோமரங்கடவலவுக்குமிடையில்

# புலிகள் - இராணுவம் மோதல்; 9 படை பலி; 6 புலிகள் வீரமரணம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐவர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. போராளிகளில் அறுவர் வீரமரணமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் சின்ன மதவாச்சிக்கும், கோமரங்கடவலவ (குமரேசன் கடவை) க்கும் இடையில்வைத்து சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தரப்பில் ஒன்பது பேர் கொல்லப்பட்டும், ஐந்து பேர் படுகாய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு புலிகள் வீரமரணம்

இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் றோயல் (சண்முகராஜா விக்னேஸ்வரன்) திரியாய் என்பவர் வீர மரணமடைந்துள்ளார்.

பின்னர் இம் மோதல் சம்பவம் நடந்த இடத்திற்குச் சற்றுத்தள்ளிமீண்டும்சண்டை மூண்டது. இச் சண்டையில் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. சேதவிபரம் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் அலெக்ஸ் (சிவநாயகம் ரஜனிகாந் 55/9 கந்தசாமி கோவிலடிதிருமலை) அத்தார் (இராசையா நவரட்ணம் திரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் உள்ள மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிநேற்று நடைபெற்றதாகத் தெரிய வருகிறது. இப் பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் மியூசியமா?

(கொழும்பு)

மாங்குளத்தில் இராணுவ முகாமுடன் மியூசியமும் இருந்ததா என்ற சந்தேகம் நேற்றைய ரூபவாஹினி செய்தியைக் கேட்டவர்களுக்கு எழுந்துள்ளது. அச்செய்தியில் மாங்குளம் இராணுவ முகாமில் கைவிடப்பட்ட நிலையில் காட்சிப்பொருளாக நிறுத்தப்பட்டிருந்த கவச வாகனத்தின் ஒரு பகுதியையே புலிகள் கைப்பற்றிச் சென்றிருக்கின்றனர் எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கொழும்பில்தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டது.

## வீரமரணம் லெப். வீனஸ்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் மாவிட்டபுரம் பகுதியில் ஏற்பட்ட மோதலில் லெப். வீனஸ் (எதிர்வீரசிங்கம் ரவீந்திரன், வல்வெட்டித்துறை) என்ற போராளி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

### மகாராஜா

இதேசமயம் கடந்த பதின்மூன்றாம் திகதி காங்கேசன்துறையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த மகாராசா (அருமைத்துரை இந்திரன் வெற்றிலைக்கேணி) என்பவர் நேற்று முன்தினம் வீரமரணமடைந்துள்ளார்.

இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (மு)

வடக்கு - கிழக்கு இணைப்பு

# ரத்துச் செய்யப்பட வேண்டும் முஸ்லிம் தேசிய அமைப்புகள் முடிவு

(கொழும்பு)

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்று நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற பல்வேறு முஸ்லிம் தேசிய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஏகமனதாக தீர்மானித்துஇருக்கின்றனர்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய அல்லாஹ் முகமட் அவர்கள் வகுப்புவாதத்தை வன்மையாகக் கண்டனம் செய்ததுடன் அனைத்து அரசியல் கட்சிகளும் வகுப்புவாதத்திற்கு எதிராக போராட முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். மேலும் முஸ்லிம் காங்கிரஸ் கோரும் தனியான முஸ்லிம் மாகாண

(4ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

**பழைய புத்தகங்கள்**

நாளாந்தம் திறந்திருக்கும். பழைய புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சில்லறைக் கடைகளுக்குரிய கடதாசி வகைகள் வாங்கப்படும் விற்கப்படும்.
Second Hand Book House
13/6 ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன்லேன், யாழ்ப்பாணம்.

(R- 871)

## மாவீரர் நாள் நினைவஞ்சலி

தமிழீழ மண்ணின்
மீட்புக்காகவும்
மக்களுக்காகவும் களத்தில்
போராடி
வீரமரணத்தைத்
தழுவிக் கொண்ட
மண்ணின் மைந்தர்களுக்கு
எம் நெஞ்சத்து நினைவு
அஞ்சலிகள்!
விடுதலைப் புலிகள்
வீழ்வதுமில்லை!
அவர்கள் கொள்கைகள்
சாவதுமில்லை!!
சுதந்திர தமிழீழம்
மலருமென்பதில்
ஐயமுமில்லை!!!

-ரஜனி

நியூ குகானந்த பவான்
(சைவ உணவகம்)
கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(B/1628)

## கற்பகா விஷேட பாண்

# கற்பகா பாண்



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபை.

கற்பகா விசேட பாண் பனை அபிவிருத்திச் சபை கற்பக விற்பனை நிலையங்களிலும், தனியார் விற்பனை நிலையங்களிலும் விற்பனை ஆகின்றது.

இப்பாணை விற்பனை செய்ய விரும்பும் முகவர்கள்

பனை அபிவிருத்திச் சபை
தலைமை அலுவலகம்,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
விற்பனை முகவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

(B-1626)


## நிவாரணம்

(மல்லாகம்)

சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, இங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த சங்க அங்கத்தவர்களுக்கும் ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்க உத்தேசித்துள்ளது.

நபர் ஒருவருக்கு 250 ரூபாவிற்கு மேற்படாத நிவாரணம் மாவீரர் தினத்தை ஒட்டி அடுத்த வாரமளவில் வழங்கப்படும் என தெ. ப. கூ. சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.


## வீர நினைவஞ்சலி

அவதரிப்பு 18 — 06 — 1964



அன்னியன் அழிப்பு 03 — 08 — 1990

# கடற்புலி நெல்சன்

(இரத்தினம் ஜெயபாலசுந்தரம்)

மயிலைமாதா பெற்ற நெல்சனே!
மண்மீட்புக்காகச் சென்று கடற்புலியாகி
நீ கரைசேர்த்த ஆயுதங்கள் எத்தனை?
களப்புலிகள் எத்தனை?
முல்லைக்காட்டில் ஆசானாகி நீ வளர்த்த
களப்புலிகள் எத்தனை?
மயிலைக் கடற்கரையில் களப்பலியானாயே!
உன் குருதி பட்டு மயிலைமண் சிவந்ததடா!!
உன் இலட்சியக் கனவு நனவாக
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டிநிற்கும்

திருப்பூர், மயிலிட்டி.
தாய், சகோதரர்கள்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(R-777)

# தமிழீழ மாவீரர்களுக்கு அஞ்சலி!



களத்தில் இவர்கள் விதைகள் - தமிழ்
நிலத்தில் இவர்கள் தலைகள்
இனத்தில் இவர்கள் புலிகள் - எம்
உளத்தில் இவர்கள் சிலைகள்!

எதிரிக்கு இவர்கள் சிம்மசொப்பனம் - செந்
தமிழுக்காய் இவர்களின் உயிர்கள் அர்ப்பணம்
கணத்திலும் இவர்களை நெஞ்சு மறக்குமா - எதிரி
மனத்தாலும் இவர்களை மிஞ்சமுடியுமா!

மரணத்தை வென்றவர்கள் எங்கள் சோதரர்
மாங்குளத்திலும் புலிக்கொடியை நாட்டி விட்டனர்
மரணித்த எங்கள் வீரர் மறத்தமிழர்கள் - தமிழ்
மாந்தர்கள் வணங்கிடும் மாவீரர்கள்!

# கணபதிப்பிள்ளை அரிசி ஆலை

## மானிப்பாய்.

(B. 1627)

## சிந்தனைக்கு

''கருமமும் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடாது அழித்தலும் தானே
தருமமாமென்றும், ஒற்றுமையோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமை கொள் வலியாம்''

— சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம் 27-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்:025-2839 நிர்வாகபீடம்:2208
த.பெ.எண் 05

# மாவீரர்களுக்கு மக்கள் வழங்கும் கௌரவம்

எம்மை ஒத்த சரீரத்தையும் அபிலாஷைகளையும் கொண்ட இளைஞர்கள், தாம் கொண்ட இலட்சியத்திற்காக தமது உயிரை அர்ப்பணித்ததை நினைவு கூரும் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும். அதாவது தமிழீழம் எனும் சுதந்திர தாயகத்துக்காகக் களப்பலி ஆன மாவீரர் நினைவுநாள் இன்றாகும்.

இந்த வீரர்களின் தியாகத்தால் இன்று உலகத் தமிழினமே தலைநிமிர்ந்து நிற்கின்றது. ஏன் உலகின் அடக்கப்பட்ட இனங்களுக்கே இவர்கள் விடிவெள்ளிகள்.

இன்று உருவாகிக்கொண்டிருக்கும் தமிழரின் விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு ஆகும். இந்த வரலாற்றிற்கு இவர்களே அத்திவாரங்கள் ஆவர். இந்த அத்திவாரத்தில் இருந்தே தமிழரின் சுதந்திரமாளிகை எழும்புகின்றது. ஆகையால் இவர்கள் சாகவில்லை; சரித்திரமாகின்றார்கள்.

இந்த மாவீரர்கள் தமிழினத்திற்காகச் சாதித்தவை-இழந்தவை பல. தாய், தந்தையர், சகோதர, சகோதரிகள், சொத்து, சுகம் யாவற்றையும் துறந்து இனத்திற்காக தம் உயிரையே கொடுத்தவர்கள். எண்ணிக்கைகள் அதிகரிக்கும்போது உயிர்களின் பெறுமதிகள் இலகுக்கு சாதாரணமாகத் தோன்றுவதுண்டு. ஆனால் ஒரு மனிதனால் கடைசியாக இழக்கப்படுவது உயிர் என்னும் போதுதான் அதன் பெறுமதி தெரியவரும்.

இந்த மாவீரர்கள் தமது உயிரைத் தியாகம்செய்து தமிழினத்திற்குவழங்கமுற்பட்டவை சுதந்திரம், கௌரவம், பாதுகாப்பு என்பவற்றையாகும். இதற்காக பௌத்த-சிங்கள சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பிற்கும் ஆக்கிரமிப்பிற்கெதிராகவும் போராடினார்கள். இதற்காகச் சிலர் தாம் உயிர்விடும் நேரத்தைக்கூட தாமே தேர்ந்து எடுத்துக் களப்பலியானார்கள்.

சிறிலங்கா அரசு, தன்னால் மாவீரர்களின் தியாகத்திற்கு முன்னால் ஈடுகொடுக்கமுடியாமல் போனபோது தமக்கு ஆதரவாக அழைத்துக்கொண்ட இந்திய இராணுவத்திற்கு எதிராகவும் இந்த மாவீரர்கள் போராடினார்கள். போராட்டத்தின் வெற்றி ஆட்களின் எண்ணிக்கையிலும், ஆயுதத்தின் பலத்திலும் அல்ல. போராடுபவர்களின் மனோபலத்தில்தான் உள்ளது என்பதை எதிரிகளுக்கு உணர்த்தினார்கள். இதன்மூலம் ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டத்தை எந்தப்பெரிய இராணுவத்தினாலும் அடக்கி ஒடுக்கிவிட முடியாது எனவும் உலகிற்குக் காட்டினர்.

இந்த மாவீரர்கள் படைத்தது வீர காவியம். இவர்களின் வீர வரலாறும், இலட்சியப்பற்றும் இலங்கைத் தமிழருக்கு மட்டுமல்ல, உலகில் ஒடுக்கப்படும் மக்கள் அனைவருக்குமே ஓர் எடுத்துக் காட்டு இலட்சியப்பற்றும், மனோவலிமையும் உள்ளவர்களால் எதையும் சாதிக்க முடியும் என்பது வரலாற்றுப்பாடம்.

# தமிழீழ மாவீரர் பாமாலை



## புதைகுழியும் புதுப்புலியை ஈனும்

நெற்றியிலே திலகமிடும் ரத்தம் - இனி
வெற்றியிலே முடியுமிந்த யுத்தம் - இனப்
பற்றினிலே பிறந்தது எம் வீரம் - உடல்
பற்றினாலும் அடைந்திடுமோ சோரம்?

கருவிலுள்ள சிசுவும் போர் ஆடும் - பெரும்
அருவியென குருதி வெள்ளம் ஓடும் - புலி
கருக்கும் அழல்கூட பகை சாடும் - ஒரு
குருவியென விடுதலைப் பண்பாடும்

சிதையினிலே எரியும் உடல்கூட - புது
விதையெனவே மலரும் பகைஓட - வெறும்
கதையிதல்ல சரித்திரமே காணும் - இவர்
புதைகுழியும் புதுப்புலியை ஈனும்

இறப்பதற்கு பிறப்பதுதான் வாழ்வா? - இனம்
சிறப்பதற்கு இறப்பதென்ன தாழ்வா? - அட
புறப்படடா புறம்படைக்க ஓடு - உன்னை
மறப்பதற்கு இல்லை இந்த நாடு!

— பாப்பாணன்

## மீட்டிடும் மண்ணிலே வாழ்பவர்...

இடர்படும் தமிழின விலங்கினை ஒடிக்கவே
துடித்திடும் சோதரர் நட்டிடும் போர்க்கொடி
படித்திளங் காளையர் பகைவரை ஒழித்திட
படிப்படியாகவே பெருகினர் பல்லாயிரம்

அடியடியாக நாம் வாழ்ந்த பூமியை
அடிவருடிகள் சேர்ந்து ஆக்கிரமித்தனர்
குடிக்கொரு தலைமகன் களத்திலே இறங்கவே
வெடித்தது புரட்சியாய், வேதனை அது சோதனை...

## விடியல்கள்

நேற்றைய விடியல்-
'ஷெல்' ஓசையுடன்
உதயமாகி
நெருஞ்சி முள்ளாய்
எங்கள் மனச்சிறகுகளை
நெருப்பெனச் சுட்ட
விஷம் தோய்ந்த விடியல்

இன்றைய விடியல்-
பொம்மர் காகங்களின்
கரையல் சத்தத்துடன்
கலந்து மலர்ந்த
கறுப்பு விடியல்

நாளைய விடியல்...?
பூங்குயில்களின்
பூபாளங்களுடன்
எழிலுடன் மிளிரும்
ரோஜாப்பூவாய் புலர்ந்து
மல்லிகை மலராய்
மணம் வீசட்டும்...!

- வல்வையூர்
குமாரவேல்

## மௌனமாய் ஓர் நிமிடம்...

மகிமை இன்று
கண்டு நிற்கும்
மாவீரர்
இவர்கள் எல்லாம்
மிளிர்ச்சி கொண்டு
எழுந்திடுவர்
மீண்டும் இங்கே
பிறந்திடுவர்
முன்னர் செய்த
போரதனால்
மூவேந்தர் கூடாகப்
பாரெல்லாம்
மெல்லக் கிளர்ந்(து)
எழுந்து
மேவிடுதே
இவர்கள் புகழ்
இங்கு
மையங் கொண்ட
போர்ச்சுழலில்
பூ மொட்டுக்களாம்
இளவீரர்
பகை
மோதலிலே
உதிர்ந்திட்டார்
இவர்கட்கு
மௌனமாய்
ஓர் நிமிடம்
அஞ்சலிகள்!

-ரவி

## கரங்கள் இணையட்டும்

செங்கள மாடிச்
சிந்திய செங்குருதி
புதுயுகம் காணும்
பாதையைக் காட்ட
சொற்களை விடவும்
செயல்களாலேயே
போதனை புரிந்தீர்!
வரும் காலத்திற்கு

சொத்து, சுகம் யாவற்றையும் துறந்து இனத்திற்காக தம் உயிரையே கொடுத்தவர்கள். எண்ணிக்கைகள் அதிகரிக்கும்போது உயிர்களின் பெறுமதிகள் சிலருக்கு சாதாரணமாகத் தோன்றுவதுண்டு. ஆனால் ஒரு மனிதனால் கடைசியாக இழக்கப்படுவது உயிர் என்னும் போதுதான் அதன் பெறுமதி தெரியவரும்.

இந்த மாவீரர்கள் தமது உயிரைத் தியாகம்செய்து தமிழினத்திற்குவழங்கமுற்பட்டவை சுதந்திரம், கௌரவம், பாதுகாப்பு என்பவற்றையாகும். இதற்காக பௌத்த-சிங்கள சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பிற்கும் ஆக்கிரமிப்பிற்கெதிராகவும் போராடினார்கள். இதற்காகச் சிலர் தாம் உயிர்விடும் நேரத்தைக்கூட தாமே தேர்ந்து எடுத்துக் களப்பலியானார்கள்.

சிறிலங்கா அரசு, தன்னால் மாவீரர்களின் தியாகத்திற்கு முன்னால் ஈடுகொடுக்கமுடியாமல் போனபோது தமக்கு ஆதரவாக அழைத்துக்கொண்ட இந்திய இராணுவத்திற்கு எதிராகவும் இந்த மாவீரர்கள் போராடினார்கள். போராட்டத்தின் வெற்றி ஆட்களின் எண்ணிக்கையிலும், ஆயுதத்தின் பலத்திலும் அல்ல. போராடுபவர்களின் மனோபலத்தில்தான் உள்ளது என்பதை எதிரிகளுக்கு உணர்த்தினார்கள். இதன்மூலம் ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டத்தை எந்தப்பெரிய இராணுவத்தினாலும் அடக்கி ஒடுக்கிவிட முடியாது எனவும் உலகிற்குக் காட்டினர்.

இந்த மாவீரர்கள் படைத்தது வீர காவியம். இவர்களின் வீர வரலாறும், இலட்சியப்பற்றும் இலங்கைத் தமிழருக்கு மட்டுமல்ல, உலகில் ஒடுக்கப்படும் மக்கள் அனைவருக்குமே ஓர் எடுத்துக் காட்டு. இலட்சியப்பற்றும், மனோவலிமையும் உள்ளவர்களால் எதையும் சாதிக்க முடியும் என்பது வரலாற்றுப்பாடம்.

அடக்கப்பட்ட தமிழினத்திற்கு சுதந்திரத்தின் அத்திவாரமாகவும், உலகில் அடக்கப்பட்டோரின் விடிவெள்ளிகளாகவுமுள்ள மாவீரர்களின் நினைவுநாளில், அவர்களை நினைவு கூருவதும், அந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பதும் எமது மக்களின் தலையாய கடமையாகும்.

இதற்காக இன்று மக்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் திருப்தி அளிப்பவையாகவே உள்ளன. வீதிகள் தோறும் அலங்காரங்கள், வீதி வளைவுகள், கலை நிகழ்ச்சிகள், சிரமதானங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மக்கள் மனதில் மாவீரர்கள் பெற்றுள்ள இடத்தை வெளிக்காட்டுகின்றன.

ஆனால் இத்துடன் மட்டும் எமது கடமை முடிந்து விடவில்லை; அவர்களின் இலட்சியங்களை எங்கள் நெஞ்சங்களில் கொள்வதும், அவர்கள் விட்டுச் சென்ற பணியின் மிச்சங்களை நாம் பூர்த்தி செய்வதுமே அவர்களுக்கு நாம் செலுத்தும் கௌரவமாகும்.

# வர்ண மின் குமிழ்களால் அலங்கார நினைவுச் சிகரம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ஆலடிச் சந்தியில் வர்ண மின்குமிழ்களுடன் இரவுவேளையில் பிரகாசிக்கும் மாவீரர் நினைவுப் பந்தலைப் பார்க்க தினமும் மக்கள் கூடிநிற்பதை காணக் கூடியதாக உள்ளது.

ஜெனரேட்டர் மூலம் மின் வழங்கப்பட்டுள்ள பந்தல் அழகாக பூச்சக்கரங்களினால் சோடனை செய்யப்பட்டு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளதால் இந்த அலங்கார விளக்குகளைப் பார்ப்பதற்காக இரவு ஏழு மணியிலிருந்து நள்ளிரவு பன்னிரெண்டு மணிவரை மக்கள் குழுமி நிற்கின்றனர். (லோ)

வெற்றியிலே முடியுமிந்த யுத்தம் - இனப்
பற்றினிலே பிறந்தது எம் வீரம் - உடல்
பற்றினாலும் அடைந்திடுமோ சோரம்?

கருவிலுள்ள சிசுவும் போர் ஆடும் - பெரும்
அருவியென குருதி வெள்ளம் ஓடும் புலி
கருகும் அழல்கூட பகை சாடும் - ஒரு
குருவியென விடுதலைப் பண்பாடும்

சிதையினிலே எரியும் உடல்கூட - புது
விதையெனவே மலரும் பகைஓட - வெறும்
கதையிதல்ல சரித்திரமே காணும் - இவர்
புதைகுழியும் புதுப்புலியை ஈனும்

இறப்பதற்கு பிறப்பதுதான் வாழ்வா? - இனம்
சிறப்பதற்கு இறப்பதென்ன தாழ்வா? - அட
புறப்படடா புறம்படைக்க ஓடு - உன்னை
மறப்பதற்கு இல்லை இந்த நாடு!

— பாப்பாணன்

## மீட்டிடும் மண்ணிலே வாழ்பவர்...

இடர்படும் தமிழின விலங்கினை ஒடிக்கவே
துடித்திடும் சோதரர் நடத்திடும் போர்க்கொடி
படித்திளங் காளையர் பகைவரை ஒழித்திட
படிப்படியாகவே பெருகினர் பல்லாயிரம்

அடியடியாக நாம் வாழ்ந்த பூமியை
அடிவருடிகள் சேர்ந்து ஆக்கிரமித்தனர்
குடிக்கொரு தலைமகன் களத்திலே இறங்கவே
வெடித்தது புரட்சியாய், வேதனை அது சோதனை...

இந்நில அரக்கரால் மாண்டனர் பல்லாயிரம்
இந்தியப் படையினால் அழிந்ததோ பல்லாயிரம்
பந்தங்கள் அழைத்திட பறந்தனர் பல்லாயிரம்
நந்தமிழ் ஈழங்காக்க வாழ்பவர் ...ஆயிரம்

அடக்கிடும் பகைவரை ஒழித்திடும் போர்முறை
நடத்திடும் மறவரை வாழ்த்திடும் நாளுமே
மீட்டிடும் மண்ணிலே சாற்றிடும் சரித்திரம்
கண்டிடும் கணத்தையே எண்ணிடும் நெஞ்சமே!

ஆக்கம்: எஸ். சிவானந்தராஜா

## மீண்டும் உறுதி பிறக்குது!

அன்னிய ஆட்சியின்
மென்னியை முறித்தனர்
அடக்கு முறையினை
உடைத்து எறிந்தனர்

களத்தில் இவர்களின்
குருதி மிதக்குது
மனத்தில் மீண்டும் ஓர்
உறுதி பிறக்குது

கழுத்தில் நஞ்சினை
பிஞ்சும் அணியுது
பழுத்து விழுந்தாலும்
சிலிர்த்து எழும்புது

மடிந்த வேங்கையே
விடியல் விடிந்திடும்
படிந்த உன் வீரம்
சரித்திரம் படைத்திடும்!

கன்னாதிட்டி
வே. மல்லிகா

மெல்லக் கிளர்ந்(து)
எழுந்து
மேவிடுதே
இவர்கள் புகழ்
இங்கு
மையங் கொண்ட
போர்ச்சுழலில்
பூ மொட்டுக்களாம்
இளவீரர்
பகை
மோதலிலே
உதிர்ந்திட்டர்
இவர்கட்கு
மௌனமாய்
ஓர் நிமிடம்
அஞ்சலிகள்!

-ரவி

## கரங்கள் இணையட்டும்

செங்கள மாடிச்
சிந்திய செங்குருதி
புதுயுகம் காணும்
பாதையைக் காட்ட
சொற்களை விடவும்
செயல்களாலேயே
போதனை புரிந்தீர்!
வரும் காலத்திற்காக
வாழும் காலத்து
வரலாறு ஆகினீர்!
-- நும்
இலக்குகள் எய்திடும்
காலம் வரும்
கரங்கள் இணையும்
வெற்றிகள் குவிக்கும்.

—இனியவன்

## மண்ணின் சொத்துக்கள்

இந்த மண்ணின்
பொக்கிஷங்கள் – நீங்கள்
அதனால்தான்
புதைத்துவைத்துள்ளோம்
நாம்
புதைத்தோமே என்றழ,
நீங்கள்
அடக்கப்பட்டவர்களாக
ஆயுதம் தரிக்கிறீர்களே!
இந்த மண்ணுக்கே
சுவாசம் வழங்கி
மூச்சை விட்ட உங்களை
இந்தச் சின்னக்
கல்லறைக்குள்
கிடக்க வைக்க முடியுமோ?
மாவீரர்களே!
இந்த மண் மட்டுமா?
இந்தப் பூமியின்
மறுமுனையின் ஜீவன்கள்
கூட
மூச்சாய் சுவாசிக்கும்!
அந்தச்
சுவாசத் தீயில்
உரிமை எழும்!

— சந்திரபோஸ்

10 வருடங்களுக்குமேல் கடமைபுரிந்த

# யாழ். மாவட்ட ஆசிரியர்கள் விபரம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் பத்து வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றிய ஆசிரியர்களின் பட்டியல் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு யாழ். கல்வித் திணைக்களத்திடம் கோரியுள்ளது.

பத்து வருடங்கள் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றிய சகல தரத்தில் உள்ள ஆசிரியர்களினதும் விபரங்களைத் தருமாறு மேற்படி அமைச்சின் செயலாளர் யாழ். கல்விப்பணிப்பாளருக்கு சுற்றுநிருபம் ஒன்றின்மூலம் கேட்டுள்ளார்.

இதேபோல எல்லா மாவட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டதாக தெரிகிறது. இந்த நடவடிக்கை ஆசிரியர்களின் இடமாற்றத்திற்குரிய முன்னோடி திட்டமாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது

## சிங்கப்பூர்பிரதமர் இராஜினாமா

(கோலாலம்பூர்)
உலகிலேயே மிக நீண்டகாலம் பதவியிலிருந்த சிங்கப்பூர் பிரதம மந்திரி லி குவான் யு நேற்றுத் தன் பதவியிலிருந்து விலகியுள்ளா . பிரதம மந்திரியாகப் பதவி ஏற்கவிருக்கும் துணைப் பிரதமருக்கு வழிவகுத்துக் கொடுக்கும் வகையிலேயே இவர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். இவர் தொடர்ந்தும் அமைச்சரவையில் ஒரு சிரேஷ்ட அமைச்சராகப் பதவி வகிப்பார். லி குவான் யு 31 வருட காலம் பிரதமர் பதவியிலிருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. துணைப் பிரதமராக இருந்த திரு. கோர்ச் - சோ - டோங் புதிய பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.

## தமிழக அரசைக் கவிழ்க்கும் நோக்கம் கிடையாது

- சந்திரசேகர்

(புதுடில்லி)
தமிழக அரசைக் கலைப்பது பற்றிய பேச்சுக்கள் எதுவும் புதுடில்லியில் எழவில்லை எனவும், மத்திய அரசுக்கு தமிழ்நாடு மாநில அரசைக் கலைக்கும் நோக்கம் எதுவும் கிடையாது என்றும் இந்தியப் பிரதமர் எஸ். சந்திரசேகர் செய்தியாளரிடம் பேசுகையில் கூறியுள்ளார்.

மேலும் பேசிய அவர் கடலோரப் பகுதிகளில் இலங்கைப் போராளிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதும், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவதும் மாநில அரசின் பொறுப்பேயாகும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## மாவீரர் கனவு நனவாகும் காலம் வெகுதூரத்திலில்லை

-அருண் மாஸ்டர்

வீர மரணத்தைத் தழுவிய மாவீரர் கண்ட இலட்சியக் கனவு தற்போது நனவாகி வருகின்றது. அந்நிய இராணுவத்தின் முகாம்கள் தொடர்ந்து வெற்றிகரமாகத் தகர்க்கப்பட்டு வருகின்றன. விரைவில் மாவீரரின் தமிழீழக் கனவு நனவாகும். அந்நாள் வெகு தூரத்தில் இல்லை.

இவ்வாறு நேற்று மாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட மாவீரர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மாவீரர் நாளில் எமது தேசியக் கொடியை நாம் ஏற்றியிருக்கிறோம். வீர மிகு தியாகிகளின் குருதியினால் எழுதப்பட்ட கொடியே தமிழீழ தேசியக்கொடியாகும். மக்களின் விடிவிற்கான முதன்மைக் கொடியும் இதுவேயாகும்.

இந் நாளில் இவ் வீர வேங்கைகளின் தியாகங்களை நினைவு கூர்வதோடு அவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வோமாக என்றார்.

இவ் விழாவில் தனியார் கல்வி நிறுவன மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தனியார் கல்வி நிறுவன முக்கியஸ்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

நோயாளிகளின்

## கொழும்புப் பயணம் மீண்டும் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)
விசேட சிகிச்சைக்காகக் கப்பல் மூலம் கொழும்புக்கான நோயாளிகளின் பயணம் மீண்டும் பின்போடப்பட்டுள்ளது.

இதற்கான வேறொரு திகதி இருபத்தி நான்கு மணிநேரக் குறுகிய காலத்துக்குள் அறிவிக்கப்படும் என்றும், எனவே கொழும்பு செல்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட நோயாளிகள் எந்த நேரமும் தயாராக இருக்கும்படியும் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாளை புதன் (28.11 90) அன்று கொழும்பு செல்வதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்வரும்நோயாளிகள் அல்லது அவர்களுடன் கூட்ச்செல்வோர் நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்குத் தம்மை நேரில் சந்திக்குமாறு யாழ். மருத்துவமனைப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வே.யோகேஸ்வரன் (காரைநகர்), அ. புவனேஸ்வரி(இந்து மகளிர் வீதி), இராணி அம்மா (பருத்தித்துறை), கே. தெய்வேந்திரம் (பருத்தித்துறை), திருமதி பிரான்சிஸ் (யாழ். நகர்), துரைராஜா (ஒட்டிசுட்டான்).

## மழைக்கு ஒதுங்கியவர் கால் போனது

(கிளிநொச்சி)
இராமநாதன் என்பவர் (வயது39) கொக்காவிலில் புலிகளால் தகர்க்கப்பட்ட சிறிலங்கா இராணுவ முகாமுக்குள் ஒதுங்கியபோது அங்கு முன்பு இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியொன்றில் சிக்கி இடது பாதத்தை இழந்ததுடன், வலதுகாலில்பலத்த காயமும் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஆறுமணியளவில் இடம்பெற்றது.

இவர் கிளிநொச்சிவைத்தியசாலையில் உடனுதவிச் சிகிச்சை செய்யப்படடு யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85

## வில்லிசை

மறுமலர்ச்சிக் கழகத்தின் இன்றைய சிறப்புக் கலை நிகழ்ச்சியாக ''விடிவை நோக்கி'' என்னும் வில்லிசை மு.ப. 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

## மாவீரர் நாளையொட்டி வீதி விஸ்தரிப்பு

மாவீரர் தினத்தையொட்டி கைதடி மேற்கில் உள்ள வீதிகள் விஸ்தரிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டு மறைந்த போராளிகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் வெள்ள வாய்க்கால் வீதி புனரமைக்கப்பட்டு ''நவாஸ்வீதி'' என்று மறைந்தபோராளியின் பெயர் பலகையை அவரது தாயாரான இ. புவனேஸ்வரி நேற்று முன்தினம் திறந்துவைத்தார்.

இவ்வீதியைக் கைதடி மேற்குச் சனசமூக நிலையத்தினர் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்தனர். (க)

கோட்டையில்

வும் ஏற்றப்பட்டது: இந்த'மாவீரர் சுடர்' என்னும் நிகழ்ச்சி கார்த்திகை மாத விளக்கீட்டை ஒத்ததாக இருந்தது.

நேற்றுவரை இந்த மண்ணிற்காக உயிரிழந்த மாவீரர்களை நினைவு கூரும் பொருட்டு இந்த ஒளி ஏற்றும் வைபவம சிறப்புற நிறைவு பெற்றது. யாழ். செயலகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாநகரசபை கட்டடம் என அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் ஒவ்வொரு தமிழ் குடிமக்களினது மனைகளிலும் விளக்குகள் ஏற்றிவைக்கப்பட்டு இருந்தன எங்கும் ஒளிமயமாக இருந்தது.

தமது வீடுகள்தோறும், விளக்குகளை ஏற்றிவைத்துவிட்ட மக்கள் ஏனைய வீடுகளிலும் கட்டடங்களிலும் ஏற்றிவைத்த விளக்கு அலங்காரத்தை காண்பதற்காக நள்ளிரவிலே மக்கள் வீதி உலாவந்த காட்சி என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்.

பகல் முழுவதும் ஒரே மழையாக இருந்த போதிலும் ஒளி விளக்கேற்று வைபவத்திற்கான ஏற்பாடுகள் கச்சிதமாக செய்து முடிக்கப்பட்டிருந்தன. நள்ளிரவில் மழைதூற்றல் இருந்ததாயினும் குறிப்பிட்ட அந்த நிமிடத்தில் எங்கும் விளக்குகள் பிரகாசிக்க ஆரம்பித்தன அதிகாலை ஒரு மணிவரை இந்த பிரகாசம் எங்கும் வியாபித்திருந்தது. தீப்பந்தங்களும், சிட்டி விளக்குகளும் இந்த வெளிச்சத்தை எங்கும் உண்டாக்கியிருந்தன.

குண்டுவீச்சில் சிதைந்து போன யாழ். நகரில் என்றுமில்லாதவாறு அதிகாலை இரண்டு மணிவரை அதிகரித்த சனநடமாட்டம் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும் நகரில் மக்கள் சுதந்திர உணர்வுடன் நடமாடினர் அதற்காக உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூர்ந்தனர். (லோ)

வவுனியா

னரில் வவுனியாவிற்கு வந்துசேர்பவர்களைக் கொண்டே இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை தெரியவரும் எனப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்தியை மேற்கோள்காட்டி இந்திய தொலைக்காட்சி அறிவித்தது மேலும் இவ் வானொலி செய்தி வெளியிடுகையில் காட்டிற்குள் ஓடியவர்களுக்கும், விமானப்படையினருக்கும் தொடர்பு எதுவும் இல்லை எனவும் தெரிவித்தது.

அதேவேளை நேற்று நண்பகல் செய்தி அறிக்கையில் குறைந்தது 250க்குமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்படடதாக இந்திய வானொலி அறிவித்தது. மேலும் காட்டுப் பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டது.

அதேவேளை நேற்று நண்பகல் செய்திவெளியிட்ட இந்திய வானொலி மாங்குளம் இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 250க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் என இலங்கைப் பாதுகாப்புப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தெரிவித்தது.

இதுபற்றி அந்தச் செய்தியில் தெரியவருவதாவது: கடந்த செவ்வாயன்று இரவு மாங்குளம் இராணுவ முகாம்மீது புலிகளால் தாக்குதல் தொடுக்கப்பட்டதாகவும் 36 மணி நேரக் கடும் மோதலின் பின்னர் இராணுவ முகாம் வீழ்ச்சியடைந்ததாகவும், தப்பியோடிய இராணுவத்தினரில் ஏழுபேர் புலிகளால் வழிமறித்துத்தாக்கி கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த முகாமில் தங்கியிருந்த இராணுவத்தினர் சுமார் 300 எனவும், இவர்களில் சுமார் 250பேர்வரையில் கொல்லப்பட்டிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

மேலும் இந்தச் சண்டை பற்றி வர்ணித்துள்ள பிறநாட்டு செய்தி நிறுவனங்கள் 1976க்குப் பின்னர் இராணுவத்தினருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்திய தாக்குதல் என்றும் இத் தாக்குதல் சம்பவம் சிறிலங்காஇராணுவத்தினருக்கு வடமாகாணத்தில் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும் செய்தி வெளியிட்டது.

புலிகள்

மடைந்தும் உள்ளனர். இராணுவத்தினரிடமிருந்து;

| | |
|---|---|
| ரி 56 - 2 ரகத்துப்பாக்கிகள் | 2, |
| ரி 56 - 1ரகத் துப்பாக்கி | 1, |
| 303 ரகத் துப்பாக்கி | 2, |
| ஐ. எம் ரவை | 300, |
| 303 ரக ரவை | 60, |
| ஏ. கே கோல்சர் | 2 |

ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ரத்துச்

சபை சுத்த அபத்தமானது என்று அவர் வர்ணித்தார். இக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட எம். பி ஜே. திவ்வியநாதனும், சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா உட்படப் பலரும் உரையாற்றினர். இறுதியில் வடகிழக்கு இணைப்பைதுண்டிக்க கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆறுபுலிகள்

யாய்) பீலிஸ்(கும்புறுப்பிட்டி) நிமால் (முருகையா கந்தரூபன் திருமலை), றிச்சார்ட் (பேரின்பராஜா விஜயராஜா 2ஆம் கட்டை நிலாவெளி) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

மூன்று நிலையங்களில்

அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர்களுக்கான மீளளிப்பு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் காலை 11 மணிக்கும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர்களுக்கான மீளளிப்பு வேலாயுதம் மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கும் இடம்பெறவுள்ளது;

கண்காட்சி

வரலாறு'' புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு நாளாந்தம் பெருந்திரளான மக்கள் கூடுவதனாலும் அதில் சிலர் கண்காட்சியைப் பார்வையிட முடியாது திரும்பிச்செல்வதனாலும்புகைப்பட கண்காட்சியானது எதிர்வரும் 7 ஆம் திகதி வரையிலான பத்துநாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மறுமலர்ச்சிக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன (மூ)

## வயிற்றோட்டத்திற்கு 10 பேர் பலி

மாத்தளையில் ரத்தோட்டைப்பகுதியில் வயிற்றோட்ட நோய் காரணமாகப் பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர். அங்கு மேலும் 3000க்கும் அதிகமானோருக்கு வயிற்றோட்ட நோய் கண்டிருப்பதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அசுத்தமான நீர் விநியோகத்தால் வயிற்றோட்ட நோய் ஏற்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் உணவகங்களையும், தேநீர்க் கடைகளையும் மறுஅறிவித்தல்வரை பூட்டும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மின்வழங்கி இசை வழங்குகிறது

தமக்குப் பிடித்தமான விடுதலைப் பாடல்களை கேட்பதற்கு சைக்கிள்'டைனமோக்கலை' பயன்படுத்துவோர் தொகை அதிகரிப்பதை சில நாட்களாகக் காணமுடிகிறது. விடுதலைப்புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினரால் அண்மையில் வெளியிடப்பட்ட வேங்கைகளின் ''விடுதலை வேதங்கள்'' என்ற ஒலிப் பதிவு நாடாவைக் கேட்பதற்கே இவ்வாறான உத்தியைக் கையாளுகின்றனர்.

மாவீரர்

உள்ள அனைத்து மாவீரர்களின் பெற்றோரும், வேறு மாவட்டங்களில் இருந்து இப்பகுதியில் வந்திருக்கும் மாவீரர்களின் பெற்றோரும் தனியாக ஒரு இடத்திற்குஅழைத்துச் செல்லப்பட்டு விடுதலைப் புலிகளால் கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்ச்சியில் 'முக்கிய பிரமுகர்' ஒருவர் கலந்துகொண்டார்.


## தமிழீழ மாவீரர் நாள் 27. 11. 1990

தமிழீழக் கனவோடு வீரமரணமடைந்த வேங்கைகளை நினைவு கொள்வோம்

செந்தமிழ் ஈழத் திசைகள் யாவும் சிவக்கும்
இந்துமா கடலில் இன்னொரு நாடு பிறக்கும்
தலைவன் ஒருவன் தாயகம் ஒன்று
விலைகள் உயிர்கள் விலங்குகள் உடையும்
தமிழர் தாயகம் விரைவில் கிடைக்கும்
தமிழீழ மாவீரர் தினமிங்கு நிலைக்கும்

வட பிராந்திய சிற்றூர்தி சேவைச் சங்கம்

(R 873)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் லக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.